# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : CC.65/2022**

**Prosecution witness : அ.சா.9** **Date : 16.07.2025.**

| | |
|---|---|
| **Name : பாலு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 27.02.2022–ம் தேதி மாலை 06.30 மணிக்கு மேச்சேரி காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த கோவிந்தராஜ் த/பெ காளியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் CSR மனு ரசீது எண்.70/2021 என்ற எண்ணில் விசாரணை செய்து , விசாரணையின் முடிவில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.125/2021 u/Sec. 147, 294(பி), 323, 324, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன்.

2. பிறகு நான் கடந்த 28.02.2021 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவ இடம் பொட்டனேரி பெரியாண்டி கோவில் அருகில் சென்று சாட்சிகள் சதீஷ் மற்றும் சங்கர்கணேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன்.

3. பின்பு நான் சாட்சிகள் கோவிந்தராஜ், மகாலிங்கம், குமார், ராஜேஷ், கார்த்திகேயன், சதீஷ், சங்கர்கணேஷ் ஆகியோர்களை நான் விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் பிறகு வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் அருண்குமார் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

4) புகார்தாரர் கோவிந்தராஜ் எனக்கு நல்ல பழக்கம் என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தராஜ் மேல் என் காவல் நிலையத்தில் காவலர்களை பணி செய்ய விடாமல் 353 IPC ன் படி இதே நீதிமன்றத்தில் தடுத்ததாக சொல்லி CC.No.199/2020 என்ற வழக்கு போடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் குற்றம் நிகழ்ந்தது 21.02.2021, எனக்கு தகவல் கிடைந்த நாள் 23.02.2021 என்றால் சரிதான். 23ம் தேதி தான் அவரிடம் வாக்குமூலம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான்.

5) வாக்குமூலத்தில் உள்ள புகாரை நான் தான் எழுதினேன். அதில் கோவில் தர்மகர்தா, பூசாரி, ராஜேஷ் கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பிரச்சனை நடந்த இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால் ஆமாம். தர்மகர்தா, பூசாரி, ராஜேஷ் மூவரை தவிர சம்பவயிடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் வேலை செய்த நபர்கள் அங்கு வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

6) புகார் வாக்குமூலத்தில் உள்ள தர்மகர்தா, பூசாரி, ராஜேஷ், மருத்துவமனையில் சேர்த்த முத்து ஆகியோரை சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு சேர்க்கப்படவில்லை என்றால் தர்மகர்தா மகாலிங்கம், பூசாரி குமார், ராஜேஷ் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பொட்டனேரிக்கும் மாதநாயக்கன்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

7) மகாலிங்கம் என்பவர் மாதநாயக்கன் பட்டியை சேர்ந்தவர் என்றால் ஆமாம். குமார் என்பவர் கொப்பத்தை சேர்ந்தவர் என்றால் ஆமாம். கொப்பத்திற்கும் பொட்டனேரிக்கும் 10 கிலோமீட்டர் தூரம் இருக்கும். புகாரில் சம்பவம் நடந்த இடம் பெரியாண்டிச்சி கோயில் அருகில் உள்ள வாதி நிலத்தில் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

8) மேற்படி இடம் சம்மந்தமாக எதிரிகளுக்கும் வாதிக்கும் வழக்கு நடந்து மேல் முறையீடு உள்ள விவரம் தெரியுமா என்றால் தீர்ப்பானதாக சொன்னார்கள். தீர்ப்பை பார்த்தேனா என்றால் 16.02.2021ம் தேதியன்று வாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதாக வாதி சொன்னார். என்ன வழக்கு என்ன தீர்ப்பு என்று நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். சம்பவம் 21ம் தேதி நடந்ததாக உள்ள நிலையில் 23ம் தேதி யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் எனக்கு தகவல் கொடுத்தார்.

9) 23.02.2021ம் தேதி விசாரணையின் அடிப்படையில் 27.02.2021ம் தேதி மாலை 06.30 மணிக்கு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். ராஜேஷ் பெயரில் மேச்சேரி காவல் நிலையத்தில் 2, 3 குற்ற வழக்கு உள்ளதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 23ம் தேதி நான் விசாரிக்கும் போது புகார்தாரர் அடித்ததாக சொல்லும் போதுவை நான் தான் விசாரித்தேன் என்றால் ஆமாம்.

10) அந்த வழக்கு இங்கு தான் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அ.சா.2 ராஜேஷ் எங்கள் காவல் நிலையத்தில் உள்ள ஒரு குற்றவாளி என்றால் எனக்கு தெரியவில்லை. அ.சா.3 கார்த்திகேயன் புகார்தாரரின் மாமன் மகன் என்றும் சொன்னால் ஆமாம். வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக காட்டப்பட்ட இடம் மண் தடம் என்றால் ஆமாம். மண் தடம் கோவிலுக்காக கொடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் நிலம் என்றால் எனக்கு தெரியாது.

11) மருத்துவரிடம் விபத்து பதிவேடு நான் பெற்று உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால் ஆமாம். விபத்து பதிவேட்டில் 3 பெண்கள், 3 ஆண்கள் அடித்ததாக உள்ளது என்றால் ஆமாம். இறுதி கருத்துரையில் கொடுங்காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது அதற்குண்டான ஆதாரம் பெற்று ஒப்படைத்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் கோவிந்தராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே கோகுல் கார்மெண்ட்ஸ் என்ற கட்டிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதில் சீட்டு ஆடுவது, மது அருந்துவது போன்ற கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் இடம் என்றால் அவ்வாறு இல்லை.

12) சாட்சிகள் மகாலிங்கம், குமார் ஆகியோர் சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் நான் விசாரிக்கும் போது அவ்வாறு சொல்லவில்லை. பார்வை மகஜர் சாட்சி சதீஷ் என்பவர் தன்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. ஏற்கனவே கோவிந்தராஜ் குற்றவாளி என்றும் அவர் சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நபர் என்றும் அவருக்கு எதிராக விசாரிக்காமல் ஆவணங்களை பரிசீலிக்காமல் கொடுத்த பொய் புகாரை பெற்று காவல் நிலையத்தில் உள்ள குற்றவாளிகளை சாட்சிகளாக சேர்த்து புகார்தாரருக்கு ஆதரவாக பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13) நான் சொன்னவாறு 21ம் தேதி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரிகள் எந்த ஒரு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் சரியான முறையில் விசாரிக்காமல் தவறாக எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கொடுத்த தவறான அறிக்கையின் அடிப்படையில் 326 இதசவாக காவல் ஆய்வாளர் மாற்றியுள்ளது பெரிய தவறு என்றால் சரியல்ல. 326 இதச பிரிவு பேனாவால் மாற்றப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கோவிந்தராஜ் என்பவருக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் உள்ள குற்றவாளிகளை சாட்சியாக சேர்த்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.